## சூனேமியாள் (பாகம் - 1)




**2 இரா 4 ஆம் அதிகாரத்தில்** சூனேமியாள் என்கிற ஒரு பெண்மணியை பற்றி நாம் காண்கிறோம். ஒரு சில வசனங்களிலே மட்டும் அவளை பற்றி கூறப்பட்டிருக்கிற பொழுதிலும், அவளுடைய வாழ்க்கை ஒரு தேவ பிள்ளை எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் உள்ளது. அவற்றை பற்றி நாம் இங்கு தியானிப்போம்.

**2 இரா 4:8** ஆம் வசனம் கூறுகிறது "**பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம்பண்ண வருந்திக்கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.**" என்று. இங்கு சூனேமியாள் என்பது அந்த ஸ்தீரியின் உண்மையான பெயராய் இராமல் அவள் இருந்த ஊரின் பெயரை வைத்து அவள் குறிப்பிடப்படுகிறாள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் அவளுடைய ஒவ்வொரு நற்குணமும் ஒவ்வொரு வசனத்திலும் தெளிவாய் கூறப்பட்டுள்ளது. வேதம் அவளை கனம்பொருந்திய ஸ்தீரி என்று நமக்கு அறிமுகப்படுத்துகிறது. படிப்பின் மூலமாகவோ, செல்வத்தின் மூலமாகவோ, அதிகாரத்தின் மூலமாகவோ தேவன் நமக்கு ஒரு கனம்

உள்ள வாழ்க்கையை தரும்பொழுது, அதை நாம் சரியான விதத்தில் உபயோகப்படுத்தி கொள்ளவேண்டும். ஏனெனில் "**கனம் பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்**". (**சங் 49:20**) என்று வேதம் கூறுகிறது.

இங்கு அவளுடைய கனம் அவளுக்கு இருந்த செல்வத்தின் மூலமாக உண்டாகியிருக்க வேண்டும். அதனால் தான் எலிசா தீர்க்கதரிசி அவ்வூர் வழியே வருகிறபொழுதெல்லாம் அவளுடைய வீட்டில் தங்க முடிந்தது. தன்னுடைய செல்வத்தை வீண் ஆடம்பரத்திற்காய், சுகபோக வாழ்க்கைக்காய் செலவழிக்காமல், ஒரு தேவ ஊழியரை தாங்குவதற்கு அதை உபயோகிப்பது எவ்வளவு நல்லது. நாம் வாழும் இந்நாளிலும் தேவன் செல்வத்தை அநேக தேவ பிள்ளைகளுக்கும், அவர்களுடைய சந்ததிகளுக்கும் கொடுத்துள்ளார். ஆனால் சுவிசேஷ ஊழியத்திற்காகவும், ஆண்டவருடைய ஊழியர்களுக்காகவும் அதை செலவிட நினைப்பவர் மிக சிலரே. தேவன் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு நல்ல செழிப்பை தந்திருந்தும், அவர்கள் அதை சுகபோக வாழ்க்கைக்காக செலவழிப்பதே இன்றும் உலகமெங்கும் சுவிசேஷம் பரவாமைக்கு ஒரு காரணமாகும்.

**2 இரா 4:9,10** வசனங்களில் "**அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்.**", என்று கூறப்பட்டுள்ளது. இங்கு சூனேமியாள் எலிசாவை பரிசுத்தவான் என்று கூறுகிறாள். இது, வெறுமனே தேவ ஊழியரை உபசரித்து விட்டு, அதன் மூலம தேவ ஆசிர்வாதத்தை பெற்றுகொள்ளலாம் என்ற சுயத்தை சார்ந்த மனநிலை இல்லாமல், தாம் உபசரிக்கிற தேவ ஊழியர் எவ்வளவாய் தேவனோடு ஐக்கியப்பட்டவர், இன்னும் நாம் எப்படிப்பட்ட உதவிகளை அவருக்கு செய்யலாம் என்று ஆராய்ந்து அறிகிற ஒரு நல்ல மனநிலையை காணலாம்.

இப்படிப்பட்ட மனநிலை இன்று நம் அனைவருக்கும் தேவை. ஏனெனில் வெறும் பணத்தை மட்டும் ஊழியத்திற்கு கொடுத்துவிட்டு, அதனால் உண்டாகிற கனிகளை குறித்து கவலைப்படாமல், நாம் போட்ட காணிக்கைக்கு நம்முடைய குடும்பத்திற்கு ஆசிர்வாதம் வந்தால் போதும் என்கிற குறுகிய மனப்பான்மை இராமல், உண்மையான ஆத்தும தாகத்தோடு நடைபெறும் ஊழியங்களை கண்டறிந்து அதற்கு தேவையான

உதவிகளை நம்முடைய காணிக்கையின் மூலம் செய்வதே நாம் தேவ இராஜ்யத்தின் பணியின் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ளோம் என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது.

**2 இரா 4:10** இல், சூனேமியாள் கூறுகிற ஒவ்வொரு காரியமும் எலிசாவிற்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படும் என்பதை நன்கு கண்டறிந்து கூறுவது அவளுடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் இவை அனைத்தையும் அவள் தன் புருஷனிடம் கூறுவது அவள் ஒரு நல்ல குணசாலியான, புத்தியுள்ள ஸ்தீரியாய், தன் புருஷனுக்கு அடங்கினவளாய் இருந்தாள் என்பதை வெளிப்படுத்துகிறது. இது சபை கிறிஸ்துவுக்கு முன் எப்படிப்பட்டதாய் காணப்பட வேண்டும் என்பதற்கு ஒரு நிழலாட்டமாய் காணப்படுகிறது.

**2 இரா 4:11-13** வசனங்களில் "**ஒருநாள் அவன் அங்கே வந்து, அந்த அறைவீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான். அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்தச் சூனேமியாளை அழைத்துக்கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டுவந்தான்; அவள் அவனுக்குமுன்பாக நின்றாள். அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்.**" நாம் காண்கிறபடி, எலிசா தன்னை இவ்வளவு கரிசனையோடு விசாரித்து வருகிற சூனேமியாளுக்கு எவ்விதத்திலாவது உதவ நினைத்து, அவளுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா என்று கேட்டார்.

அதற்கு அவள் கூறிய பதில் "**என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்**" என்பதாகும். இது ஒரு திருப்தியுள்ள வாழ்க்கையை, மனநிறைவுடன் கூடிய வாழ்க்கையை அவள் வாழ்ந்தாள் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு பதிலை அவள் ஒரு பெரும் நெருக்கத்தின் மத்தியிலேயே கூறினால் என்பதை நாம் **2 இரா 4:14** இல் அறியலாம் "**அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு; அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.**"

ஆம் அவளுக்கு பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்பதாகும். எனவே, பிள்ளை பிறக்கும் எதிர்பார்பை அவள் இழந்துவிட்ட நிலையில், உண்மையிலேயே ஒரு பெண்ணாக அது

அவளுக்கு மிகுந்த வேதனையை தந்த பொழுதும், அதை வெளிக்காட்டாமல், தேவ ஊழியரை கனப்படுத்தி தன் வாழ்வை அர்த்தமுள்ளதாய் வாழ்ந்து முடிக்க நினைத்தாள். ஆனால் தேவனோ, எந்த முறுமுறுப்பும் இல்லாமல், தன் குறையை நினைத்து தேவனிடம் முறையிடாமல், தேவ சித்ததிற்கு தன் வாழ்வை அர்பணித்து தன் வாழ்க்கையை மற்றவருக்கு பிரயோஜனமுள்ள ஒரு வாழ்வாய் வாழ்ந்து முடிக்க நினைத்த சூனேமியாளின் வாழ்க்கையில் கிரியை செய்ய ஆரம்பித்தார். எல்லாமே முடிந்து போய் இனி யாரிடம் கூறி என்ன பயன் என்ற நிலையில் வாழ்ந்த சூனேமியாளின் வாழ்க்கையில் எலிசா மூலம் தேவன் கிரியை செய்தார். அதனை நாம் அடுத்த பாகத்தில் தியானிப்போம்.

தேவன் தாமே, சூனேமியாளை போல அவரையே சார்ந்திருக்கிற நம் ஒவ்வொருவர் வாழ்விலும் அற்புதங்களை தம் சித்தத்தின் படியும், திட்டத்தின் படியும் நிச்சயம் செய்வார். ஆமென், அல்லேலூயா.